## சாதாரணகூட்டநிகழ்ச்சிநிரல்

## கூடலூர் நகராட்சியில் மார்ச் மாதம் (08.03.2019) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை11.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.

**பொருள்.1**
நகராட்சிஆணையாளர் அவர்களின் பிப்ரவரி/2018 ஆம் மாதத்தியநாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண். 549**

**பொருள்:2**
நகராட்சிபொறியாளர் அவர்களின் பிப்ரவரி/2018 ஆம் மாதத்தியநாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண். 550**

**பொருள்:3**
இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு 1.04.2019 முதல் 31.03.2022 முடிய மூன்று ஆண்டுகளுக்கு வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு 28.02.2019 ஆம் நாள் பொது ஏலத்துடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேற்படி உரிமைக்கு வங்கி வரைவோலை ஒப்படைத்து 3 நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டு கோரியுள்ள உயர்ந்த பட்ச ஏலத்தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**(ந.க.எண்.170/2019/அ1)**

| வ. எண். | பெயர் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கு.சூரியபிரகாஷ் | – | 2,00,500/– |
| 2 | பா.கண்ணன் | – | 2,00,400/– |
| 3 | சோ.கவாஸ்கர் | – | 2,00,200/– |

மேற்கண்ட உரிய இனத்திற்கு வரிசை எண்.1 இல் கண்ட திரு.கு.சூரியபிரகாஷ் என்பவர் உயர்ந்த பட்ச ஏலத்தொகையாக ரூ. 2,00,500/–க்கு கோரியுள்ளார். சென்ற ஆண்டைவிட ரூ.396/– கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரியை விட ரூ.9774/–கூடுதலாக உள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண். 551**

பொருள்:4

கூடலூர் நகர்மன்ற கூட்ட தீர்மான எண்: 27 நாள்: 21.11.2011 ஆம் தேதிய தீர்மான நகல்

கூடலூர் நகர்மன்ற தீர்மானம் எண்: 27 நாள்: 21.11.2011 ல் இந்நகராட்சியில் வசூலிக்கப்படும் கட்டட உரிமை கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் போன்ற இனங்களுக்கு திருத்திய கட்டணம் வசூலிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன்பேரில், மதுரை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு 01.04.2010 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு 9வருடங்களுக்கு மேலாக வசூலிக்கப்பட்டு வருகின்றது. தற்போது கட்டட உரிமை கட்டணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறு கட்டண விகிதங்கள் உயர்வு செய்து 01.04.2019 முதல் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் பெயர் | வகை விவரம் (மீ) | காலம் | பழைய கட்டண விகிதம் (ரூ) | புதிய கட்டண விகிதம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 175, 178 | ஒரு நிலத்தையோ அதன் பாகத்தையோ மனைப் பிரிவாக பிரித்துக் கொள்வதற்கு | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கு | ஒரு தடவை மட்டும் | 3000 | 5000 |
| | | | கூடுதல் ஒவ்வொரு 0.5ஹெக்டேர்களுக்கும் | ஒரு தடவை மட்டும் | 600 | 1000 |
| 2. | 197(1) மற்றும் 200 | அனுமதிக்கப்பட்ட எந்த மனைப் பிரிவிற்கு பொது அல்லது சொந்த தெருவை நோக்கி உள்ளதுமான இடத்தில் கட்டிடம் கட்டிக் கொள்வதற்கு மனை அங்கீகாரம் செய்ய | மனை ஒன்றுக்கு | | 250 | 500 |
| 3. | 197, 201 மற்றும் 215 | குடிசை நீங்கலாக புது கட்டடம் கட்டவோ, புதுப்பித்து கட்டவோ மாறுதல் செய்து கட்டவோ அனுமதி விவரம் | | | | |
| | | 1) குடியிருப்பு கட்டடம் அ)RCC அல்லது லாடக்கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 150 | 300 |
| | | ஆ) ஓடு, தகரம், சிமிண்ட் தகர கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 100 | 200 |
| | | முதல் தளம் அல்லது அதன் மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | | | | |
| | | அ) RCC அல்லது லாகடக் கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 120 | 250 |
| | | ஆ) ஓடு, தகரம், சிமிண்ட் தகர கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 120 | 180 |
| | | 2) குடியிருப்பு இல்லாத கட்டடங்கள் குடியிருப்பு இல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் கட்டடங்கள் எதுவாயினும் | | | | |
| | | அ) RCC அல்லது லாகடக் கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 200 | 400 |
| | | ஆ) ஓடு, தகரம், சிமிண்ட் தகர கட்டடம் | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 150 | 300 |
| | | 3) சுற்றுச்சுவர் கட்ட | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 100 | 200 |
| | | 4) சுற்றுச்சுவர் (மண்) அல்லது வேலிபோட | 10ச.மீ அதன் பாகத்திற்கு | 5 வருடங்கள் | 100 | 200 |
| | | 5) மலஅறை, குளியலறை கட்டுவதற்கு | முக்கிய கட்டடத்துடன் கூடியது தனியாக 25 ஒவ்வொன்றிற்கு | 5 வருடங்கள் | 100 | 200 |
| | | 6) செப்டிக் டேங்க் 1-க்கு | முக்கிய கட்டடத்துடன் தனியாக | 5 வருடங்கள் | 150 | 250 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 7) மாடி படிக்கட்டு 1-க்கு | | 5 வருடங்கள் | 200 | 300 |
| | | 8) பழைய சுவர்களை கொத்தி பூச அல்லது தளம்போட அல்லது இதுபோன்ற சில்லரை மராமத்து வேலைகளுக்கு | ஒருதடவை மட்டும் | 3மாதம் | 500 | 750 |
| | | அபிவிருத்திக் கட்டணம் | | | | |
| | | குடியிருப்புக் கட்டணம் | 10 ச.மீட்டருக்கு | | 5 | 15 |
| | | குடியிருப்பில்லாத கட்டணம் | 10 ச.மீட்டருக்கு | | 10 | 20 |
| | | மொத்த நிலத்திற்கு | 1 ச.மீட்டருக்கு | | 5 | 10 |
| 4. | 207 | குழாய் கிணறு, குழிகிணறு போன்ற எவ்வகை கிணறு அமைக்க | ஒவ்வொன்றுக்கும் | 5 வருடங்கள் | 200 | 300 |
| 5. | 208 | குடிசை கட்ட புதுப்பிக்க 20ச.மீ பாகத்திற்கு குறைவாக | ஒவ்வொரு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 5 வருடங்கள் | 100 | 200 |
| 6. | 217(2) | அ) தற்காலிக குடிசை அல்லது செட்டுபோட | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 1 வருடம் | 100 | 200 |
| | | ஆ)அனுமதி வழங்கப்பட்ட கட்டட வரைபடங்களுக்கு உண்மை நகல் வழங்க | நகல் 1-க்கு | | 150 | 250 |
| 7. | 197, 201 மற்றும் 215 | 1) நிரந்தர திரையரங்கு கட்டிக் கொள்ள தடையில்லாச்சான்று வழங்குவதற்கு | இனம் 1-க்கு | ஒரு தடவை மட்டும் | 5000 | 7500 |
| | | 2) தற்காலிக திரையரங்கு கட்டிக் கொள்ள தடையில்லாச் சான்று வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 3500 | 14000 |
| | | 3) சர்க்கஸ் கொட்டகை அமைத்துக் கொள்ள | இனம் 1 | மாதம் 1-க்கு | 5000 | 7500 |
| | | 4) நகரமைப்பு திட்ட பாதிப்பு இல்லையென சான்று வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 150 | 250 |
| | | 5) கட்டட முடிவு சான்றிதழ் வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 150 | 250 |
| | | 6) மனைப்பிரிவு வரைபட நகல் வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 200 | 300 |
| 8. | பிரிவு 6 வீடியோ படம் | 1) வீடியோ நூலகம் அமைக்க தடையில்லா சான்று வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 300 | 450 |
| | | 2) வீடியோ தியேட்டர் அமைக்க தடையில்லா சான்று வழங்க | இனம் 1 | ஒரு தடவை மட்டும் | 750 | 1100 |
| 9. | | கட்டட தளவாட சாமான்கள் தெருவில் ஓரம் குவித்து வைக்க (கட்டட அனுமதி பெறுபவர்களுக்கு) | | ஒரு தடவை மட்டும் | கட்டட உரிமை ஆணைக் கட்டணத்தில் 50% | |
| 10. | பிரிவு 6 வீடியோ படம் | 1) நகர்ப்பகுதியில் திரைப்படம் தயாரித்தல் | இனம் 1 | நாள் ஒன்றுக்கு | 2500 | 5000 |
| | | 2) டிஜிட்டல் பேனர் நிறுவ உரிமையாணைக் கூராய்வுக் கட்டணம் | இனம் 1 | 6 நாட்கள் | 100+500 | 100+500 |

**அலுவலக குறிப்பு:**

9வருடங்களுக்கு மேலாக கட்டண விகிதம் திருத்தியமைக்கப்படாமல் உள்ள நிலையிலும், நகராட்சியின் நிதிநிலையை உயர்த்துவதற்கும், திருத்தி அமைக்கப்பட்ட கட்டண விகிதத்தை 01.04.2019 முதல் நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 552**

**பொருள்:5**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019, விதி 14-இல் திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி ஐந்து ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்புக் காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டட அனுமதி மற்றும் திட்ட அனுமதி கட்டணங்களை 50 சதவீதம் உயர்வு செய்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது, முதல் அனுமதி காலமான ஐந்து ஆண்டு கால வரையறைக்குள் கட்டடப்பணி முடிக்கப்படாமல் ஒருமுறை கால நீட்டிப்பு கோரும் இனங்களுக்கு மூன்றாண்டுகளுக்கான கால நீட்டிப்பும், அதற்கு இணையான கட்டணங்களும் வசூலித்து அனுமதி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:31149/2018/டிபி3, நாள்:05.03.2019-இல் மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.553**

**பொருள்:6**

இந்நகராட்சியில் உள்ள ஒரு நகரமைப்பு ஆய்வர் காலிபணியிடம் பூர்த்தி செய்வதற்கு தகுதி வாய்ந்த நபர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, செய்தி தொடர்பு அலுவலர் தேனி அவர்கள் மூலம் தினமலர், மதுரை மணி ஆகிய இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, நாளிதழ்களில் விளம்பரம் செய்யதமைக்கு செலவு தொகை ரூ.25360/– (தினமலர் – ரூ.11024/– மற்றும் மதுரை மணி **ரூ.14336/–)** வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.**(ந.க.எண் 1937/2017/அ2)**

**அலுவலக குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.554**

**பொருள்:7**

இந்நகராட்சி எல்லையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாடம் சேகரம் செய்யப்படும் திடக்கழிவுகளைக் கொண்டு உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணி மேற்கொள்ளும் போது தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கவும், பொது சுகாதாரம் பேணவும் 2019–2020 ஆம் ஆண்டிற்கு கிருமி நாசினிப் பொருட்களான பிளீச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புத்தூள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் **ரூ10,00,000/–க்கு** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் 816 /2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 .மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.555**

**பொருள்:8**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் நிரந்தர துப்புரவுப் பணியாளர்களுக்கு துப்புரவு பணிமேற்கொள்ளும் போது பயன்படுத்தும் பாதுகாப்பு உபகரணங்கள் **2019 –2020** ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் :811/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 . மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.556**

**பொருள்:9**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனங்களுக்கான சாலைவரி **31.03.2019** உடன் முடிவடைவதால் **01.04.2019** முதல் **31.03.2020** வரை உள்ள காலத்திற்கான சாலை வரியினை வட்டார போக்குவரத்து அலுவலர், உத்தமபாளையம் என்ற பெயரில் ஆன்லைனில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( நக எண் 275/2019/எச்1)**

| வ.எண் | வாகனத்தின் பெயர் | தொகை ( ரூபாயில் |
|---|---|---|
| 1 | TN 60 Y 8120 | **2859** |
| 2 | TN 60 T 6093 | **2859** |
| 3 | TN 60 T 6098 | **2859** |
| 4 | TN 60 AY 3850 | **2859** |
| | மொத்தம் | ரூ**11436** |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.557**

**பொருள்:10**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் நிரந்தர துப்புரவுப் பணியாளர்களுக்கு 2019 – 2020 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் அதற்கான தையற்கூலி மற்றும் அடையாள அட்டைகள் வழங்கவும் ஆகும் உத்தேச செலவீனம் **ரூ5,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் :806/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2 . மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.558**

**பொருள்:11**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ள 2019 –2020 ஆம் ஆண்டிற்கு தேவையான மண்வெட்டி, கடப்பாறை,, குப்பை அள்ளும் தட்டுகள், சாக்கடைக் கரண்டி, முள்கரண்டி பெருக்குமாறு போன்ற தளவாடச்சாமான்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் **ரூ7,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் :810/2019/எச்1) அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.559**

**பொருள்:12**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் கீழ் டெங்கு சிக்கன்குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு மருந்து அபேட்120 லிட்டர், பைரித்ரம் மற்றும் நிலவேம்பு குடிநீர் மற்றும் கொசுப்புகை மருந்து தெளிக்க பயன்படுத்தப்டும் Gas Cylinder 1500 எண்ணங்கள் 2019 –2020 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் **ரூ15,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் :808/2019/எச்1)அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.560**

**பொருள்:13**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2019 –2020 ஆம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை 2016 சட்ட விதிகளின் படி மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் எனத் தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணிகளை செயல்படுத்தவும், மக்களிடையே திடக்கழிவுகளை பிரித்து வழங்கிடக் கோரி விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கவும், திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நிலையை உருவாக்கவும், டெங்கு சிக்கன்குனியா, மலேரியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த (IECActivities) ஆகும் உத்தேச செலவீனம் **ரூ5,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் :807/2019/எச்1) அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.561**

**பொருள்:14**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அன்றாடம் திடக்கழிவுகளை சேகரம் செய்து உரம் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் 7 கனரக வாகனங்களுக்கான வருடாந்திர தகுதிச் சான்று பெறுதல் மற்றும் 18 BOV (Battery Operated Vehicle ) மற்றும் 2 LCV வாகனங்களை பராமரிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவீனம் **ரூ10,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க எண் :809/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.562**

**பொருள்:15**

இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் ஒரு பெரிய Vehicle Mounted, Pulse Fog, Hand Fog- 10 எண்ணங்கள் அடிக்கடி பழுதாகி விடுவதால் 2019 –2020 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கம் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க எண் 787/2019/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.563**

**பொருள்:16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் டெங்கு ஒழிப்பு பணிக்காக 29 DBC (Domestic Breeding Checkers ) பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், தேனிஅவர்கள் நிர்ணயித்த ஊதிய அளவுகோலின்படியும் மற்றும் தொழிலாளர் சேமநலநிதி வைப்பத் தொகை சேர்த்து நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ250 வீதம் 29 பணியாளர்களுக்கு ரூ25,23,000/–க்கு நகர்மன்றத் தீர்மான எண 340 நாள் 20.06.18ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ஒ.மு எண்13433/2018/ கே1 நாள்:17.09.2018இன்படி ஒரு DBC பணியாளருக்கு 300 குடியிருப்புகள் வீதம் 11685 குடியிருப்புகளுக்கு 1685/300 =39 DBC பணியாளர்களை பணியமர்த்த வேண்டி கூடுதலாக 10 DBC பணியாளர்களை பணியமர்த்த அக்டோபர் 2018 முதல் மார்ச் 2019 வரை பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ9,50,000/–க்கு நகர்மன்றத் தீர்மான எண் 440 நாள் நாள் 22.11.2018ல் அனுமதி பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு ஒரு DBC பணியாளருக்கு ரூ208/– மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் EPF துறையின் வழிகாட்டுதலின் படி 25% சேமநலநிதி பணியாளரின் சம்பளத் தொகையில் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்படி 39 DBC பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ208/– மற்றும் தொழிலாளர் சேமநலநிதி 25% சேர்த்து செலுத்த வேண்டியுள்ளதால் நாள் ஒன்றுக்கு ஒரு DBC பணியாளருக்கு தினக்கூலியாக ரூ260/–வீதம் வழங்கவும் தற்சமயம் ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 வரை ஊதியம் வழங்காமல் இருப்பதனால் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், தேர்தல் நன்னடத்தை விதிகள் தற்போது அமலில் உள்ளதாலும் ஜீலை மாதம் 2019 வரை மேற்காணும் பணியாளர்களுக்கு ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க எண் :787/2019/எச்1 )**

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியில் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.564**

**பொருள்:17**

கூடலூர் நகராட்சி நகர்மன்றத்தீர்மான எண்.**463** நாள் **14.12.2018**ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **22.02.2019** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.**( ந.க.எண். 2920 /2018 /இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூரா் நகராட்சியில் வார்டு எண்-3 கள்ளா் தெற்கு தெருவில் உள்ள சேதமடைந்த தார்ச்சாலையினை சீரமைத்தல் | 9.50 | திரு.சி.செல்வேந்திரன் | 0.01% | – |
| | | | திரு.பி.முருகன் | – | 0.07% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட **0.01%** குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.சி.செல்வேந்திரன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.565**

**பொருள்:18**
இந்நகராட்சி தனி அலுவலர் அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகனம் எண் TN-60 R 6378 –ற்கு,ஆயில் சர்வீஸ் புதிய டயர்கள்,பேட்டரி மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்ய 2019-2020 –ஆம் ஆண்டிற்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**( ந.க.எண். 883 /2019 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.566**

**பொருள்:19**
இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் வாகனம் எண் TN-60 R 7332–ற்கு,ஆயில் சர்வீஸ் புதிய டயர்கள்,பேட்டரி மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்ய 2019-2020 –ஆம் ஆண்டிற்கான ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**( ந.க.எண். 882 /2019 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.567**

**பொருள்:20**

கூடலூர் நகராட்சியில் **2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்** திடக்கழிவு மேலாண்மைப் **பணிக்கு ரூ.11.20 லட்சம் மதிப்பீட்டில்** முதல் நிலை குப்பை சேகர பணிக்கு தேவையான **(LCV)2**எண்ணம் இலகுரக வாகனம் **(Light Commercial Vehicle) -** வாங்குவதற்கு 20.02.2019 ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | KRYSTAL MOTORS Pvt Ltd.No39/2, MM Brothers Thotam, Telcom Company Backside,Kanthampatty By-Pass,Salem |
| 2 | Lakshmi Auto Diesel Works,8/12 MTC Road,Meturdam. |
| 3 | Sakthi Auto Motors Ltd,No62 Sakthi Finance Biulding,Nanjapparoad, Ghandhipuram,Coimbatore |
| 4 | ABT Industries Ltd,PB No.7 51-A,Palakad Road,South Ukadam Coimbatore |

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**(ந.க.எண். 945/2018/இ1)**

| வ.எண். | ஒப்பந்த நிறுவன பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட விலை |
|---|---|---|
| 1 | ABT Industries Ltd,PB No.7 51-A,Palakad Road,South Ukadam Coimbatore | ரூ. 5,59,950 |
| 2 | Sakthi Auto Motors Ltd,No62 Sakthi Finance Biulding,Nanjapparoad, Ghandhipuram,Coimbatore | ரூ. 6,00,000 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள **ABT Industries Ltd,PB No.7 51-A,Palakad Road,South Ukadam Coimbatore**.என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள **ABTIndustries Ltd,PB No.7 51-A,Palakad Road,South Ukadam Coimbatore** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.568**

**பொருள்:21**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-21ல் உள்ள கார்நிலையத்தெரு குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகள்நடைபெறும் போது பணியின் மீது ஜெயராணி மற்றும் ஐந்து நபர்களால் மதுரை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேற்படி வழக்கு எண்W.P(MD)No.3270/2019க்கு அரசு வழக்கறிஞருக்கு செலுத்த வேண்டிய வழக்கு கட்டணம் ரூ.9,500/-ஐ வழக்கறிஞர் திரு.கருப்பசாமி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**( ந.க.எண். 811 /2019 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.569**

**பொருள்:22**

கூடலூர் நகராட்சியில் அன்றாடம் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் GAS-CHLORINATION அமைப்பினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை நீரேற்று நிலையம் லோயர் கேம்பில் நிறுவிட ரூ.2,70,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ந.ம.தீ.எண்.204 நாள் 30.11.2017ல் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.மேற்படி தலைமை நீரேற்று நிலையவளாகத்தினுள் GAS-CHLORINATION அறை அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டது. எனவே மேற்படி பணியினை செயல்படுத்த இயலவில்லை. அதனால் அதே மதிப்பீட்டுத்தொகையில் வார்டு எண்-21 லோயர்கேம்பில் புதிய ஆழ்துழை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்பு அமைத்து அருகில் உள்ள தெருக்களுக்கு அதிலிருந்து குழாய் பதித்து குடிநீர் வழங்கும் பணியினை ஒப்பந்ததாரர் திரு.கே.வனராஜ் அவர்களின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.**( ந.க.எண். 2721 /2017 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.570**

**பொருள்:23**

கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் உள்ள தனியார் வலைதள இணைப்பிற்கு செலுத்திய வருட சந்தா தொகை 24.04.2019 ஆம் நாளுடன் முடிவடைகிறது.அனைத்து அலுவலக பணிகளும் கனிணியின் மூலம் நடைபெற்று வருகிறது.அலுவலக பணிகள் தங்குதடையின்றி நடைபெறும் பொருட்டு ஒருவருடத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை ரூ.1,60,008/-ஐ **ALLIANCE BROAD BAND SERVICES Pvt Ltd**, சென்னை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.**( ந.க.எண்.1187 /2019 /இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.571**

**பொருள்:24**

## 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.
(ந.க.எண். 21/2019/எச்1)

1. (i) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

   (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர் துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

   (iii) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

   (iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்;:**
   இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(**Spot fine**) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2 **th;j;jf epWtdq;fspd; tifg;ghL :**

I. மொத்தமாக (**Whole sale**)
சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

IV. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**
இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.
துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. **கீழ்க்காணும் அட்டவணை II**-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை:-**
கூடலூர் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் கூடலூர் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**6.தண்டனைகள் விபரம்:-**

**அட்டவணை II**

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |

| | | | | |
|---|---|---|---|---|
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.572**

**// உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி**